

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் முதலமைச்சர் அவர்களின் ”ஓரணியில் தமிழ்நாடு என்ற திட்டத்தின் கீழ் வாக்குச்சாவடி தோறும் 30 சதவீதம் வாக்காளர்களை தி.மு.க உறுப்பினர்களாக்கும் நிகழ்வு நெல்லை கிழக்கு மாவட்டம் அம்பாசமுத்திரம் தொகுதிக்கு உட்பட்ட பத்தமடை, சேரன்மகாதேவி ஆகிய பகுதிகளில் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கழக துணை பொதுச் செயலாளர் கழக நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி அவர்கள் பங்கேற்று வீடு வீடாகச் சென்று உறுப்பினர் சேர்க்கை முகாமை துவக்கி வைத்தார். அப்போது கூடியிருந்த பொதுமக்கள் ”ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை அட்டையை மகிழ்ச்சியில் தூக்கிப் பிடித்துக் காட்டினர். உடன் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

## தென்காசி வடக்கு மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர்

# கிருஷ்ண லீலா புதல்வி ஜிந்தகி-அ.ஆல்ட்ரின் ஞானராஜ் திருமணம்!

### ராஜா ஈஸ்வரன் - ராணி ஸ்ரீ குமார்- ஹெலன் டேவிட்சன் -ச.தங்கவேலு சதன் திருமலைக்குமார்-எஸ்.தங்கப்பாண்டியன்-வி.பி.ராஜன் வாழ்த்துரை!

தென்காசி, ஜுலை 7-

தென்காசி வடக்கு மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர், சிவகிரி பேரூராட்சி உறுப்பினர் கிருஷ்ண லீலா எம். சீமான் கௌதம் ஆகியோரது மகள் எஸ்.ஜிந்தகி , திருச்சி மாவட்டம் முள்ளிப் பட்டி இறைவன் நகர் காவல் துறை சிறப்பு உதவி ஆய்வாளர் ஞா. அந்தோணி செல்வம்- அ.மரிய செல்வி, அ.ராதா ஆகியோரது மகன் அ.ஆல்ட்ரின் ஞானராஜ் ஆகியோரது திருமணம் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு இன்று (7.7.2025-திங்கள் கிழமை) காலை 9 மணிக்கு மேல் 10 மணிக்குள் சிவகிரி சி.எஸ்.ஐ தூய லூக்கா ஆலயத்தில் சிவகிரி சேகரத் தலைவர்,

சி.செல்வின் டேனியல் ராஜ், கூடன்குளம் சேகரத் தலைவர் எம்.பொன் ராபின் வினோ ஆகியோரது தலைமையில் நடைபெறுகிறது, அதன் பின் திருமண வரவேற்பு நிகழ்ச்சி சிவகிரி தேவர் மகா சபை திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது. தலைமைச் செயற்குழு உறுப்பினர் யு.எஸ்.டி.சீனிவாசன் தலைமை வகிக்கிறார். வாசுதேவ நல்லூர் வடக்கு ஒன்றிய செயலாளர், முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் பொன்.முத்தையா பாண்டியன், மாநில மருத்துவர் அணி துணைச் செயலாளர் டாக்டர் செ.சு.செண்பக விநாயகம்,

வாசுதேவநல்லூர் தெற்கு ஒன்றிய செயலாளர் கோ.பூசைப்பாண்டியன், தென்காசி வடக்கு மாவட்ட துணைச் செயலாளர் வே.மனோகரன், இராய கிரி பேரூர் கழக செயலாளர் கே.டி.சி ச. குருசாமி, சிவகிரி பேரூராட்சி தலைவர் எஸ்.கோமதி சங்கரி சுந்தரி வடிவேல், வாசுதேவநல்லூர் பேரூர் கழக செயலாளர் ரூபி ஆ.பாலசுப்பிர மணியன், சிவகிரி பேரூர் கழக செயலாளர் வி.எஸ்.ஜி.சேது சுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலை வைக்கின்றனர். மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் ஆர். கார்த்திக் வரவேற்புரையாற்றுகிறார் மாவட்ட பிரதிநிதி டாக்டர் ஜி.எஸ்.எஸ்.நல்லசிவன் தொகுப்புரை வழங்குகிறார்.

தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா ஈஸ்வரன் எம்.எல்.ஏ, தென்காசி பாராளுமன்ற உறுப்பினர் ராணி ஸ்ரீ குமார், மாநில மகளிர் அணி செயலாளர் ஹெலன் டேவிட்சன், சட்டமன்ற உறுப்பினர்கள் தி.சதன் திருமலைக்குமார், எஸ்.தங்கப்பாண்டியன், முன்னாள் அமைச்சர் ச.தங்கவேலு, முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் வி.பி. ராஜன மாநில வர்த்தகர் அணி இணைச் செயலாளர் எஸ்.முத்துச் செல்வி, முன்னாள் மாவட்ட செயலாளர் பொ.சிவபத்மநாதன்,

தலைமைச் செயற்குழு உறுப்பினர் மா.செல்லத்துரை, முன்னாள் மாவட்ட செயலாளர் ஆ.துரை, தனுஷ் எம்.குமார், எஸ்.பரமகுரு, எம்.பி.கே.மருதப்பன், இராம.வைரமுத்து, இரா.அருள்ஜோதி பாபா, மாவட்ட கழக நிர்வாகிகள் கோ.சுப்பையா, ஜோ.இராஜதுரை, சு.புனிதா, இல.சரவணன், வி.சந்திர லீலா, எம்.பூங்குடி, பொதுக்குழு உறுப்பினர்கள் க.வேல்ச்சாமி பாண்டியன், எஸ்.எம்.சாகுல் ஹமீது, டி. வெள்ளத்துரை, பா.மாரிச்சாமி, பி.மாரி ச்சாமி, ஆர். தேவதாஸ், மு.பராசக்தி, த.மகேஷ்வரி மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடி கள் மணமக்களை வாழ்த்துகின்றனர் முடிவில் சிவகிரி 17வது வார்டு கழக செயலாளர் எம்.ரூபன் குமார் நன்றி கூறுகிறார்.

---

## தி.மு.க.

# தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் நியமனம்!

### தலைமைக் கழகம் அறிவிப்பு!

நிரப்பப்படாமல் உள்ள தி.மு.க. தகவல் தொழில்நுட்ப மாநில துணைச் செயலாளர் பொறுப்புக்கு **டாக்டர் அழகு ராஜா** அவர்கள் தலைமைக்கழகத்தால் நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாநில நிர்வாகிகளுடன் இவர் இணைந்து பணியாற்றுவார்.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 18
நாள் : 6.7.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

---

## சென்னை மாநகராட்சி மருத்துவமனைகளில்

# முதுநிலை மருத்துவர்களுக்கான சுகாதாரச் செயல்பாடுகள் குறித்த பயிற்சி!

### மேயர் திருமதி ஆர்.பிரியா தொடங்கி வைத்தார்!

சென்னை, ஜுலை.7-

பெருநகர சென்னை மாநகராட்சியின் சுகாதாரச் சேவைகளை மேம்படுத்தும் பொருட்டு, மாநகராட்சி மருத்துவமனைகளில் மருத்துவர்களாக பணிபுரியவுள்ள பட்ட மேற்படிப்பு முடித்த முதுநிலை மருத்துவர்களுக்கான சுகாதாரச் செயல்பாடுகள் குறித்த பயிற்சியினை 04.07.2025 அன்று ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் மேயர் திருமதி ஆர்.பிரியா தொடங்கி வைத்து உரையாற்றினார்.

பெருநகர சென்னை மாநகராட்சி பொதுசுகாதாரத்துறை மற்றும் மருத்துவச் சேவைகள் துறையின் 140 நகர்ப்புர ஆரம்ப சுகாதார மையங்கள், 200 நகர்ப்புர நலவாழ்வு மையங்கள், 16 நகர்ப்புர சமுதாய நல மருத்துவமனைகள், 3 மகப்பேறு மருத்துவமனைகள் மற்றும் ஒரு தொற்றுநோய் மருத்துவமனை ஆகியவற்றின் மூலமாக பொது மக்களுக்கு மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டு வருகிறது.

தேசிய நகர்ப்புற சுகாதார இயக்ககத்தின் மூலமாக, பெருநகர சென்னை மாநகராட்சியில் இயங்கும் நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையங்கள், நகர்ப்புர நலவாழ்வு மையங்கள் மற்றும் நகர்ப்புர சமுதாய நல மருத்துவமனைகளில் பொதுமக்களுக்கு கூடுதலான சேவைகள் வழங்க தேவையான மருத்துவர்கள் மற்றும் மருத்துவம் சாரா பணியாளர்களை பணியமர்த்தி செயல்பட்டு வருகிறது.

---

## மாண்புமிகு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலில் நடைபெறும் “ஓரணியில் தமிழ்நாடு” பரப்புரை திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தும் வகையில்

# திமுக தகவல் தொழில்நுட்ப அணி மண்டலங்களில் மாற்றங்கள் செய்யப்பட்டு மண்டல பொறுப்பாளர்கள் நியமனம்!

### தி.மு.க. தொழில்நுட்பச் செயலாளர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா அறிவிப்பு!

மாண்புமிகு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலில் நடைபெறும் “ஓரணியில் தமிழ்நாடு” பரப்புரை திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தும் வகையில் திமுக தகவல் தொழில்நுட்ப அணி மண்டலங்களில் மாற்றங்கள் செய்யப்பட்டு கீழ்க்காணும் வகையில் மண்டல பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

| மண்டல பொறுப்பாளர் | மாவட்டங்கள் |
|---|---|
| திரு.சி.எச். சேகர் (மாநில துணை செயலாளர்) சென்னை மண்டல பொறுப்பாளர் | திருவள்ளூர் கிழக்கு, திருவள்ளூர் மேற்கு, திருவள்ளூர் மத்திய, சென்னை கிழக்கு, சென்னை தெற்கு, சென்னை மேற்கு, சென்னை வடக்கு, சென்னை வடகிழக்கு, சென்னை தென் மேற்கு |
| திரு.டாக்டர். ஏ.கே. தருண் (மாநில துணை செயலாளர்) சேலம் மண்டல பொறுப்பாளர் | தருமபுரி மேற்கு, தருமபுரி கிழக்கு, கள்ளக்குறிச்சி தெற்கு, கள்ளக்குறிச்சி வடக்கு, திருவண்ணா மலை தெற்கு, திருவண்ணாமலை வடக்கு சேலம் மத்திய, சேலம் மேற்கு, சேலம் கிழக்கு. |
| எஸ்.டி.இசை (மாநில துணை செயலாளர்) வேலூர் மண்டல பொறுப்பாளர் | கிருஷ்ணகிரி கிழக்கு, கிருஷ்ணகிரி மேற்கு, திருப்பத்தூர், இராணிப்பேட்டை, வேலூர் |
| நவின் (மாநில துணை செயலாளர்) நெல்லை மண்டல பொறுப்பாளர் | திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி மத்திய, தென்காசி வடக்கு, தென்காசி தெற்கு, கன்னியா குமரி கிழக்கு, கன்னியாகுமரி மேற்கு. |
| அ.தமிழ்மாறன் (மாநில துணை செயலாளர்) காஞ்சி மண்டல பொறுப்பாளர் | காஞ்சிபுரம் தெற்கு, காஞ்சிபுரம் வடக்கு, விழுப்புரம் மத்திய, விழுப்புரம் வடக்கு, விழுப்புரம் தெற்கு. |
| அ.தமிழ்மறை (மாநில துணைச் செயலாளர்) கோவை மண்டல பொறுப்பாளர் | கோவை மாநகர், கோவை வடக்கு. கோவை தெற்கு, நீலகிரி. |
| பி.கேசவன் (மாநில துணை செயலாளர்) கரூர் மண்டல பொறுப்பாளர் | நாமக்கல் கிழக்கு, நாமக்கல் மேற்கு, திருப்பூர் தெற்கு, திருப்பூர் வடக்கு, திருப்பூர் மத்திய, திருப்பூர் கிழக்கு, ஈரோடு வடக்கு, ஈரோடு தெற்கு, ஈரோடு மத்திய, கரூர் |
| திரு.எம்.விஜய கதிரவன் (மாநில துணை செயலாளர்) முகவை மண்டல பொறுப்பாளர் | இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர் வடக்கு, விருதுநகர் தெற்கு, தூத்துக்குடி வடக்கு, தூத்துக்குடி தெற்கு. |
| பி.எம். ஸ்ரீதரன் (மாநில துணை செயலாளர்) தஞ்சை மண்டல பொறுப்பாளர் | தஞ்சை வடக்கு, தஞ்சை மத்திய, தஞ்சை தெற்கு, திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கடலூர் மேற்கு, கடலூர் கிழக்கு. |
| பாச.பிரபு (மாநில துணை செயலாளர்) மதுரை மண்டல பொறுப்பாளர் | திண்டுக்கல் கிழக்கு, திண்டுக்கல் மேற்கு, மதுரை மாநகர், மதுரை தெற்கு, மதுரை வடக்கு, தேனி தெற்கு, தேனி வடக்கு. |
| ஏ.கே.அருண் (மாவட்ட ஒருங்கிணைப்பாளர்) திருச்சி மண்டல பொறுப்பாளர் | திருச்சி தெற்கு, திருச்சி வடக்கு, திருச்சி மத்திய, பெரம்பலூர், அரியலூர், புதுக்கோட்டை வடக்கு, புதுக்கோட்டை தெற்கு |

**அண்ணா அறிவாலயம்**
சென்னை
நாள் :6.7.2025

**முனைவர் டி.ஆர்.பி.ராஜா**
செயலாளர்
தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# இ.என். கிருஷ்ணன்

### ஜுலை 7 (2015)



இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

ஒருங்கிணைந்த சென்னை மாவட்டத்தில் 3 முறை வட்டக் கழகச் செயலாளராகவும் – பொதுக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு, பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய உறுப்பினராகவும், சேமாத்தம்மன் திருக்கோவில் அறங்காவலர் குழு தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்துகொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

# சேலம் மத்திய மாவட்ட தி.மு.க தொண்டர் அணி அறிமுகக் கூட்டம்!

### மாவட்ட அமைப்பாளர் ஆர்.பாலகிருஷ்ணன் வேண்டுகோள்!

சேலம், ஜுலை 7-

சேலம் மத்திய மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் ஆர்.பாலகிருஷ்ணன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சேலம் மத்திய மாவட்ட தி.மு.க. தொண்டர் அணி அறிமுகக் கூட்டம் 9.7.2025 - புதன்கிழமை. காலை 10 மணிக்கு. மாவட்ட கழக அலுவலகம். கலைஞர் மாளிகையில் நடைபெற உள்ளது.

ஆகவே சேலம் மத்திய மாவட்டத்தை சேர்ந்த தி.மு.க. தொண்ட் அணி தலைவர், துணை தலைவர், மாநகர அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், புதிதாக நியமிக்கப்பட்ட பகுதி, ஒன்றியம், பேரூர், நகர கழக அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் தவறாமல் கலந்துகொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்

**பொருள்** 1) புதிய கழக உறுப்பினர்கள் சேர்த்தல்.

2) 2026ல் நடைபெற இருக்கும் பொது தேர்தலில் சிறப்பாக பணியாற்றுவது.

மேற்கண்டவாறு சேலம் மத்திய மாவட்ட தி.மு.க. தொண்டர் அணி அமைப்பாளர் ஆர்.பாலகிருஷ்ணன் கூறியுள்ளார்

---

## தி.மு.க. அயலக அணி

# சேலம் கிழக்கு மாவட்ட அமைப்பாளர் நியமனம்!

### தி.மு.க. அயலக அணிச் செயலாளர் எம்.எம்.அப்துல்லா அறிவிப்பு!

சேலம் கிழக்கு மாவட்ட அயலக அணி அமைப்பாளராக நியமிக்கப்பட்ட க. திருநாவுக்கரசு அப்பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டு அவருக்கு பதிலாக **ச. பிரதீப்,** (5/103, ஆத்துமேடு, பனமரத்துப்பட்டி, சேலம்) அவர்கள் சேலம் கிழக்கு மாவட்ட அயலக அணி அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட அணி நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றிட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 05-07-2025.

**எம்.எம். அப்துல்லா, எம்.பி.,**
செயலாளர்
தி.மு.க. அயலக அணி

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# ஏ.எஸ்.குமாரசாமி

### ஜுலை 7 (2004)



இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு காங்கேயம் பேரூர்ச் செயலாளர், காங்கேயம் ஒன்றியச் செயலாளர் என கழகத்தில் பொறுப்பு வகித்து பணியாற்றியவர்.

காங்கேயம் பேரூராட்சி துணைத் தலைவர், காங்கேயம் கூட்டுறவு நிலவள வங்கி தலைவர் ஆகிய பதவி வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்துகொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**